மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையிலே ஆராய்ந்து, அரசாங்கம் நாமே இப்படிப்பட்ட தொழிலைத் தொடங்குவது நல்லது என்று முடிவெடுத்தது. மேற்கு ராமநாதபுரத்திலே இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களை அழைத்துப் பேசி, அவர்களைப் பங்கு போடச் சொல்லி, அரசாங்கமும் போட்டு, இந்தத் தொழிலில் ஈடுபட்ட ஒருவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் திரு. அய்ய நாடார் என்பவரைத் தலைவராக்கி, 1,825 டன் ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி செய்கின்ற, சுமார் ரூபாய் 70 லட்சம் முதல் போடவேண்டிய பொட்டாசியம் குளோரேட் தயாரிக்கும் தொழிற்சாலையை தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எஸ். டி. ஆதித்யன் : தலைவரவர்களே, பொட்டாசியம் குளோரைட் போன்ற மற்ற மூலப்பொருட்களும் இருக்கின்றன. உதாரணமாக பெர்மாங்கனேட், பாஸ்பரஸ் முதலியவை இருக்கின்றன. அவற்றையும் உற்பத்தி செய்வதற்கு ஏதேனும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புளூ மாட்ச் பேப்பர், மாட்ச் வாக்ஸ், ரெட் பாஸ்பரஸ், பொட்டாசியம் குளோரைட், சல்பர், ஃக்ளூ (Glue) இவைகள் தான் அதில் சம்பந்தப்பட்ட பொருட்கள். இதில் ரெட் பாஸ்பரஸ் கிடைக்காத கஷ்டம் இருக்கிறது என்று போகும்போதெல்லாம் சொல்லுகிறார்கள். அதைத் தொடங்க முடியுமா என்று பரிசீலனை செய்யும்படி இலாக்காவைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்கு மூலப்பொருள் கஷ்டம் என்கிறார்கள்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, திரு. அய்ய நாடார் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட பைரக் சேட் ஒரு வருடத்திற்கு முன்னால் துவங்கப்பட்டது என்று கருதுகிறேன். இப்போது அது எந்த நிலைமையில் செயல்பட்டு வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில நாட்களுக்கு முன்னால் அந்த வழியாகப் பார்த்துக்கொண்டு வந்தேன். மேலூர் பக்கத்தில் வாணம் எல்லாம் பிரித்து வெட்டி கட்டிட வேலை தொடங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

Tuticorin Petro-Chemical Complex

*8 Q.—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of persons employed in the Tuticorin Petro-chemical Complex;

1974 சனவரி 19]

(b) the Government's share in the recruitment of persons in this Joint Sector Company; and

(c) whether recruitment is made through the Employment Exchange ?

தூத்துக்குடி பெட்ரோ-கெமிக்கல் தொழிற்சாலை

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தூத்துக்குடி பெட்ரோ-கெமிக்கல் தொழிற்சாலையில் எவ்வளவு பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் ?

(இ) இக்கூட்டுத் துறையில், ஆட்கள் பணிக்கு நியமிக்கப்படும்பொழுது, அரசாங்கத்தின் பங்கு என்ன ?

(உ) வேலை வாய்ப்பு ஸ்தாபனத்தின் மூலம் ஆட்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 666 பேர்.

(இ) முதுநிலைப் பதவிகளுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கத் தேர்வுக் குழு ஒன்றுள்ளது. இக்குழுவில் (டிட்கோ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழக இயக்குநரும் ஓர் உறுப்பினராவார். ஏனைய பதவிகளுக்கு சம்பந்தப் பட்ட குழுக்கள் ஆட்களைத் தேர்ந்தெடுக்கின்றன.

(உ) ஸ்பிக் (SPIC) நிறுவனம், பதவிக் காலியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு அறிவிக்கிறது.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, இப்படிப்பட்ட தொழிற்சாலைகளில் ஆட்களை எடுக்கிறபோது, தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு அதிகமான வாய்ப்பு கொடுக்கப்படுகிறதா? அல்லது வேறு மாநிலத்திலிருப்பவர்களை எடுக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது போன்ற பெரிய தொழில்களை எல்லாம் 1967-க்கு முன்னாலே தனியாரே தொடங்கி நடத்தி வந்தார்கள். அரசாங்கம் அத்தனை உதவியையும் தனியாருக்குச் செய்து வந்தது. நம்முடைய அரசு புதிய கொள்கையின் அடிப்படையில் தனியாருக்குச் செய்கிற உதவியைவிட நாமே முதல்போட்டு நிர்வாகத்தில் பங்கு பெறவேண்டும் என்று முடிவெடுத்தது. போர்ட் ஆப் டைரக்டர்ஸிலே சேர்மன் போடும்போது, நாமே ஆர்டர்ஸ் போடுகின்றோம். மானேஜிங் டைரக்டர் போடும்போது, நாமே ஆலோசித்துப் போடுகிறோம். போர்ட் ஆப் டைரக்டர்ஸில் அரசு அலுவலர்கள்

இருக்கிறார்கள். ரெக்ரூட்மெண்ட் பாலிசியைப் பொறுத்த அளவுக்கு, நாம் சில கொள்கைகள் போர்டில் வைக்கிறோம். ஓரளவுக்கு அதிகச் சம்பளம் உள்ளவர்களை போர்டின் அனுமதியோடு போடவேண்டும். அதற்குக் குறைந்த சம்பளம் உள்ளவர்களை குழுவில் பரீட்சை வைத்து, இண்டர்வியூ வைத்துப் போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். நிச்சயம் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வருகிறோம்.

Assignment of Land in Thalakkavoor village, Ramanathapuram district

*9 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) Whether the Government have received any application requesting to assign land in Thalakkavoor village, Ramanathapuram district; and

(*b*) if so, the action taken thereon by the Government?

இராமநாதபுரம் மாவட்டம், தளக்காவூர் கிராமத்தில் நில ஒப்படைப்பு

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், தளக்காவூர் கிராமத்தில், நில ஒப்படைப்பு கோரி அரசுக்கு விண்ணப்பம் வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) 1971 மேலும் 1972ம் ஆண்டுகளில் தளக்காவூர் கிராமத்தில் நில ஒப்படைப்பு கோரி 59 நபர்கள் விண்ணப்பம் செய்தனர். அவர்களுக்கு 80.73 ஏக்கர் நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

Entertainments Tax collected from the Madras Race Club, Guindy, Madras

*10 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Revenue be pleased to state the details of the entertainments tax collected by the Government from the Madras Race Club, Guindy, Madras, for the last five years?